அரசு வழங்கும் கடன்களுக்கு வட்டி வீதம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) ரிசர்வ் பாங்க் வட்டி விகிதத்தை ஒரு சதம் குறைத்ததால் தமிழக அரசு வழங்கும் கடன்களுக்கும், கூட்டுறவு இலாகா மூலம் பொது மக்கள் பெறும் கடன்களுக்கும தமிழக அரசு வட்டி விகிதத்தை குறைக்குமா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : (a) (i) In the case of loans sanctioned by Government the rate of interest charged will not be reduced as a result of the reduction in the Bank rate.

(ii) In the case of loans given to the public through Co-operative Department, a portion of the reduction in rate is being passed on to the public.

(b) In the case of loans sanctioned by the Co-operatibe Central Banks, instructions have been issued that the rate charged to the ultimate borrower may be reduced by 0.6 per cent and that charged to primary credit societies by the Central Bank by 0.4 per cent. The margin retained by primaries has been increased with a view to making them financially stronger.

Sales tax on mill yarn

* 80 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(a) whether exemption from the levy of Sales Tax has been given to the mill yarn alone exported to the other States from Tamil Nadu;

(b) the shortfall in income for the Government of Tamil Nadu as a result of this; and

(c) the loss of income that will be sustained by the Government in a year if such exemption is given to entire mill yarn?

ஆலை நூல் மீது விற்பனை வரி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) தமிழகத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதியாகும் மில் நூலுக்கு மட்டும் விற்பனை வரி ரத்து செய்யப்பட்டதா ?

1st March 1969]

(இ) இதனால் தமிழக அரசுக்கு ஆண்டுக்கு எவ்வளவு வருவாய் குறையும் ?

(உ) மில் நூல் முழுதுக்கும் விற்பனை வரி ரத்து செய்தால் ஒரு ஆண்டுக்கு தமிழக அரசுக்கு எவ்வளவு வருவாய் குறையும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்தக் கேள்வியில் கேட்டிருக்கும் வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதியாகும் மில் நூலுக்கு விற்பனை வரி ரத்து செய்யப்பட்டிருக்கிறது. ரத்து செய்யப்பட்ட வகையில், சென்னை ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் ஆக்டின்கீழ் ரத்து செய்ததன் மூலமாக, ரூ. 58,13,000-ம் சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் மூலமாக ரூ. 58,000-ம் வருவாய் குறையும். மொத்தமாக ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ், சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் இரண்டையும் நூலுக்கு எடுத்து விட்டால் மொத்தம் நமக்கு ஏற்படும் நஷ்டம் ரூ. 1,75,71,200 ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் மூலமும் ரூ. 77,08,300 சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் மூலமும் குறையும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, தென் இந்தியாவில் தொழிற்சாலைக்காரர்கள் தமிழ்நாட்டில் மில் சொந்தக்காரர்கள் இந்த விற்பனை வரியை ரத்து செய்துவிட்டால் கூட போதும், மில்களை மீண்டும் நடத்த ஏதுவாகும் என்று அரசுக்கு தெரிவித்திருக் கிறார்களே, அது பற்றி அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதைத்தான் சொல் கிறேன். அதன் அடிப்படையில் சுங்க வரியில் எந்த அளவுக்கு மத்திய அரசு குறைக்க முன்வருகிறதோ அதே மாதிரி நம்முடைய நல்ல எண்ணத்தைக் காண்பிக்கிற வகையில் விற்பனை வரியில் இருந்தும் குறைக்க ஆலோசிக்கும் என்று இந்த அரசு சொல்லி யிருந்தது. இந்தக் கருத்தில்தான் மத்திய நிதித்துறை அமைச்சருக்கும் 'நாங்கள் குறைக்க முன்வருகிறோம் நீங்கள் சலுகை காட்டவேண்டுமென்று' சொல்லியிருந்தது. நேற்றைய தினம் மத்திய நிதியமைச்சர் அறிவித்திருக்கிற நிதிநிலை அறிக் கையில் நூல் சம்பந்தமாக சலுகைகள் காட்டியிருப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன. அவைகளின் அடிப் படையில் எந்த அளவுக்கு இதை குறைக்க நாம் முன்வரலாம் என்பதை ஆராய வேண்டியிருக்கிறது. நம்முடைய நல்ல எண்ணத்தின் எடுத்துக்காட்டாகத்தான் ஏற்கனவே ரூ. 58 லட்சம் நம்முடைய பொது விற்பனை வரி சட்டத்தின்கீழ் ரத்து செய்யப் பட்டது. ரூ. 58 ஆயிரம் சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் ரத்து செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து சுங்க வரி எந்த அளவுக்கு வந்திருக்கிறதோ அதனுடைய அடிப்படையில் குறைப்பதற்கான வழியை அரசு ஆராயும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, மற்ற ராஜ்யங்களில் மின்சாரத்திற்கு என்ன விகிதங்கள் வசூலிக்கப் படுகிறதோ அந்த விகிதங்கள் இங்கே வசூலித்தாலும் விற்பனை வரியைக் குறைத்துவிட்டாலும், நாங்கள் நோயாளி மில்கள் உட்பட தமிழகத்தில் உள்ள அத்தனை மில்களையும் நடத்த முடியும் என்று கூறுகிறார்களே அதை இந்தஅரசு ஆலோசித்ததா? மின்சாரக் கட்டணமாக ரூ. 4 கோடி அளவுக்கு நம் அரசு வசூலிப் பதாகக் கூறுகிறார்கள். அடுத்த ராஜ்யத்தில் மின்சாரக் கட்டணத்தைப்போல் இரண்டு பங்கு நாம் வசூலிக்கிறோம். அதனால்தான் மில்களை ஓட்ட முடியவில்லை என்று கூறப்படுகிறதே அதைப்பற்றி அரசு பரிசீலித்ததா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அது முற்றிலும் சரி யான வாதம் அல்ல. அப்படி யாரும் கூறவில்லை. அவர்கள் சொல்வது, சுங்க வரிதான் கொடுமையாக அழுத்துகின்ற பாரமாக இருக்கிறது; அதைக் குறைப்பதற்கு இந்த அரசு போராட வேண்டும் என்று சொல்கிறார்கள். இந்த அரசுக்கு நல்ல எண்ணம் இருக்கிறது என்பதற்கு அடையாளமாக விற்பனை வரியையும் மின்சாரக் கட்டணத்தையும் குறைக்கவேண்டுமென்றுதான் மில் அதிபர்களின் கோரிக்கை. அதில் சில நியாயங்கள் இருக் கின்றன. நான் ஏற்கனவே சொல்லியதைப் போல மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் மொரார்ஜி தேசாய் அவர் களுக்கு கடிதம் எழுதினார்கள். அதன் விளைவாகத்தான்— இன்றைக்கு மில் நூல்களுக்கான சுங்க வரியை—நீங்கள் எந்த அளவுக்கு குறைக்கிறீர்களோ அந்த மாதிரி சலுகை காட்ட நாங்கள் முன்வருவோம் என்று சொல்லியதன் காரணமாகத் தான். இன்று சென்ட்ரல் பட்ஜெட்டில் சலுகை வந்திருக்கிறது. அதைப்பார்த்து எந்த அளவு கொடுக்க முடியும் என்று பரிசீலனை செய்து மில்கள் மூடாமல் இருக்கவும் தொழில் ஸ்திரமாக அமையவும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் செயலாற்றி நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

THIRU A. R. DAMODARAN : Sir, apart from the exemption from levy of sales tax, reduction in electricity charges and excise duties, is it not a fact the main difficulty of the textile mills in our State is lack of working capital and not really lack of profitability in running them?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, it is also one of the factors.

திரு. அர். கிருஷ்ணசாமி நாயுடு : மற்ற மாநிலங்களில் நூல் நூற்பு ஆலைகளுக்கும் நெசவு ஆலைகளுக்கும் விதிக்கப்படுகிற மின்சார கட்டணத்தின் அளவுக்கு ஒப்ப தமிழ்நாட்டு அரசு குறைக்க வேண்டுமென்பதோடுகூட மின்சார கட்டணத்தின் பேரில் சர் சார்ஜ் விதிக்கப்படுவதையும் நீக்க வேண்டுமென்று மில் சொந்தக்காரர்கள் வேண்டுகோள் விடுத்திருப்பதை அரசாங்கம் கவனிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் தியாகராஜன் அவர்கள் கேள்விக்கு இதைத்தான் பதில் சொன்னேன். மின்சாரக் கட்டணம் என்பது ஒரு துளி போன்றது. சுங்க வரியின் அழுத்தம் வேறு. உறுப்பினர் தாமோதரன் அவர்கள் சொல்லியதைப் போன்று மூலதனம். ஏற்கனவே பழுதான இயந்திரங்கள், பருத்தியின் விலை உயர்வு மார்க்கெட் கிடைக்காத தன்மை, விலை அபாயத்தைப் பற்றிய சமாசாரங்கள் வருகிற லாபத்தை மீண்டும் எந்தத் தொழிலுக்கு செலுத்துவது என்ற தன்மை, அண்டை மாநிலமான கேரளம், ஆந்திர போன்றவற்றில் மில்களிலே நூல் தயாரிக்கும் நிலைமை, மீண்டும் இங்கே கம்போசிட் மில் மூலம் வரும் துணி நூல் இல்லாத தன்மை, இவ்வளவும் சேர்ந்து இன்றைக்குத் தமிழ்நாட்டுப் பஞ்சாலைத் தொழிலுக்கு பல நெருக்கடிகள் உள்ளன. ஆகையால் விற்பனை வரி மின்சாரக் கட்டணச் சலுகைகள் எல்லாம் பெரிய பிரச்சினைகளில் ஒரு சிறிய அம்சம்தான்.

Export of Bananas.

* 81 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state :

(*a*) the names of the other States and foreign countries to which bananas are exported from Tamil Nadu; and

(*b*) the value of bananas exported in 1967-68?

வாழைப் பழங்கள் ஏற்றுமதி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) தமிழகத்திலிருந்து உற்பத்தியாகும் வாழைப்பழங்கள் எந்தெந்த வெளி மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் அனுப்பப் படுகின்றன ?

(இ) 1967-68-ஆம் ஆண்டில் எவ்வளவு ரூபாய் மதிப்புள்ள வாழைப் பழங்கள் அனுப்பப்பட்டன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) 1967-68-ம் ஆண்டில் வாழைப்பழங்கள் தமிழ்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவில்லை. ஆனால் மாநிலங்களுக்கு இடையில் விற்பனை அடிப்படையில் தமிழ்நாட்டிலிருந்து மைசூர், கேரள மாநிலங்களுக்கு வாழைப் பழங்கள் விற்பனை செய்யப்பட்டன.

(இ) மாநிலங்களுக்கு இடையிலான விற்பனை அடிப்படையில் விற்பனை செய்யப்பட்ட வாழைப் பழங்களின் தோராய மதிப்பீடு ரூ. 2.5 கோடியாகும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, சமீபத்தில் குஜராத் மாநில சர்க்கார் பாரசீக வளைகுடா பக்கமுள்ள நாடுகளுக்கும், அரேபிய நாடுகளுக்கும் 4 கோடி ரூபாய் அளவுக்கு வாழைப் பழங்களை விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருப்